கிழக்குப் பல்கலைக்கழகம், இலங்கை

நான்காம் வருட/இரண்டாம் அரையாண்டு சிறப்புக் கலைமாணித் தேர்வு – 2011/2012
(செப்ரம்பர்/ஒக்டோபர் 2014)

**EDUS 4105** கல்வியில் தற்கால எழுவினாக்களும் கொள்கைகளும்

நேரம் : 03 மணித்தியாலங்கள்

நீர் விரும்பிய நான்கு வினாக்களுக்கு மட்டும் விடை தருக.

---

01.(அ) இலங்கையின் கல்வி வரலாற்றில் சமவாய்ப்புக் கோட்பாட்டிற்கு அடிப்படையாக அமைந்த திட்டங்கள் பற்றி விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் கல்வியைத் திருப்தியான வகையில் ஜனநாயகப்படுத்த எத்தகைய நடவடிக்கைகளை மேற்கொள்ளலாமென ஆராய்க.

(13 புள்ளிகள்)

02.(அ) அபிவிருத்தியடைந்த நாடுகளின் முன்பள்ளிக்கல்வியின் சிறப்புகளைக் குறிப்பிட்டு விளக்குக.

(12 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் ஆரம்பக்கல்வி ஆசிரியர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகளைப் பகுப்பாய்வு செய்க.

(13 புள்ளிகள்)

03.(அ) சுதந்திரத்திற்குப் பிற்பட்ட காலத்தில் ஏற்பட்ட கல்விக் கொள்கைகளையும் சீர்திருத்தங்களையும் முன்வைத்து சுருக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) இலங்கையின் தொழிற்கல்வி ஏற்பாடுகள் குறித்து கருத்துரைக்குக.

(10 புள்ளிகள்)

04.(அ) முழுமைப்பண்பு முகாமைத்துவம் என்றால் என்ன என்பதை குறிப்பிட்டு, கல்வியில் பண்பு வீழ்ச்சிக்குரிய பொதுவான காரணிகளைச் சுருக்கமாக ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) செயல் நிலைக் கற்றலைச் சுருக்கமாக விளக்கி இக்கற்பித்தல் மாணவர்களுக்கு இரண்டாம்தர பாடசாலைகளில் எந்தளவிற்குச் சாதகமாகக் காணப்படுகின்றதென்பதை விளக்குக.

(10 புள்ளிகள்)

05.(அ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் பெண் கல்வி பெறும் முக்கியத்துவத்தை ஆராய்க.

(15 புள்ளிகள்)

(ஆ) அபிவிருத்தியடைந்துவரும் நாடுகளில் உயர்கல்வியில் உள்ள பிரச்சினைகளை எடுத்துரைத்துச் சுருக்கமாக விளக்குக.

(10 புள்ளிகள்)

06. பின்வருவனவற்றிற்கு விளக்கம் தருக.

(அ) அபிவிருத்தியடைந்த நாடுகளில் முதியோர் கல்வி.

(ஆ) தற்போதைய தேசிய கல்விக்கொள்கை மற்றும் நடைமுறைகள்

(இ) இலங்கையின் ஆசிரியர் கல்வியும் சம காலப்பிரச்சினைகளும்

(ஈ) தொலைக்கல்வியும் திறந்த கல்வியும்

(உ) 2007 – 2014 வரையான காலப்பகுதியில் கல்விச் சீர்திருத்தங்கள்

(05x05=25 புள்ளிகள்)

*****